---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பீஓசி புறொப்பட்டி டெவெலப்மென்ட் அன்ட் மனேஜ்மென்ட் (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இந்தக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்தொழிலிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் உதவியை நான் பெற்றிருந்தேன்.

கம்பனியின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 பொருத்தமற்ற பெறுமதி கணிப்பீடு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியானது முழுமையாக பெறுமானத்தேய்வடைந்துள்ள ரூபா 6,473,266 மற்றும் ரூபா 238,677,326 தொகையான முறையே ஆதனம், பொறி & உபகரணங்கள் (PPE) மற்றும் முதலீட்டு ஆதனம் என்பன தற்போதும் பாவனையில் உள்ளன. எனினும் இச் சொத்துக்களின் பயன்தரு ஆயட்காலத்தினை மீள் மதிப்பீடு செய்வதன் மூலம் பின்னோக்கிய சீராக்கங்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவில்லை. | முழுமையாக பெறுமானத்தேய்வடைந்துள்ள சொத்துக்களானவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பின்னோக்கிய சீராக்கங்கள் தொடர்பாக கணக்காய்வாளர்களின் ஆலோசனையுடன் கலந்தாலோசிப்படுகின்றது. | நடைமுறை சந்தைப் பெறுமதி அல்லது இச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலத்தினை மீள்மதிப்பீடு செய்வதன் மூலம் இச்சொத்துக்களின் பெறுமதியினை மீள்மதிப்பீடு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

**கணக்காய்வு விடயம்**

(i) சகல ஒப்பந்தக்காரர்களுடனான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளில் வாடகையானது முற்பணமாக செலுத்தப்படல் வேண்டும். எனினும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் பெறவேண்டிய வாடகை மீதி ரூபா 18,115,075 ஆகும். இதில் 90 நாட்களுக்கு மேலாக ரூபா 9,754,221 அல்லது 54 சதவீதமானவை நிலுவையாக உள்ளது. ஆகையினால் கம்பனியினால் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்பட்ட ஒப்பந்த வாடகைகளினை சேகரிக்க முடியவில்லை என்பது அவதானக்கப்பட்டது. மொத்த ஒப்பந்த வாடகை நிலுவைகளில், ரூபா 9,581,823 அல்லது 53 சதவீதமானவை கொள்ளுப்பிட்டி மேர்சன்ட் டவர் கட்டடத்திடமிருந்தும் மிகுதி 47 சதவீதமானவை கண்டி சீபேங்க் ஹவுஸிடமிருந்துமாகும். பெறவேண்டியவைகளின் வயதுப் பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | நிலுவை மீதி (ரூபா) | | | | |
|---|---|---|---|---|---|
| | 1-30 நாட்கள் | 31-60 நாட்கள் | 61 – 90 நாட்கள் | 90 நாட்களுக்கு மேல் | மொத்தம் |
| **மேர்ச்சன்ட் டவரிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் - கொள்ளுப்பிட்டி** | | | | | |
| 1. ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி | 2,001,865 | - | - | - | 2,001,865 |
| 2. இலங்கை வங்கி – மேல் மாகாணம் வடக்கு | 287,473 | - | - | - | 287,473 |
| 3. இலங்கை வங்கி – சுபர் க்ரேட் கிளை | 344,448 | - | - | - | 344,448 |
| 4. இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் | 983,451 | - | - | 188.813 | 1,172,264 |
| 5. எஸ்எல்ஐஐடி அகடமி (பிறைவேட்) லிமிட்டட் | 1,120,095 | - | - | 174,360 | 1,294,455 |

**முகாமைத்துவ கருத்துரை**

எஞ்சினுய்டி (பிறைவேட்) லிமிட்டட், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் எஸ்எல்ஐஐடி அகடமி (பிறைவேட்) லிமிடட் என்பன தவிர்ந்த கீழே காட்டப்பட்டுள்ள ஏனைய பெறவேண்டியவைகள் அனைத்தும் தீர்க்கப்பட்டுள்ளன. எரிபொருள் நெருக்கடியின் போது அறிமுகப்படுத்தப்பட்ட எரிபொருள் மிகைகட்டணங்களே இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் எஸ்எல்ஐஐடி அகடமி (பிறைவேட்) லிமிடட் என்பவற்றிடமிருந்து பெறவேண்டியவைகளாக உள்ளன.

**பரிந்துரை**

உரிய நேரத்தினுள் பெறவேண்டிய வாடகையினை சேகரிப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. எஞ்சினுய்டி (பிறைவேட்) லிமிட்டட் | - | - | - | 3.847,913 | 3,847,913 |
| 7. டியலொக் அக்ஸியடா பிஎல்சி | 101,933 | 39,221 | - | - | 141,154 |
| 8. மொபிட்டல் (பிறைவேட்) லிமிட்டட் | 50,985 | | | - | 50,985 |
| 9. பர்டி எயார்டல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 37,751 | 1,474 | - | - | 39,225 |
| 10. இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு | 311,429 | - | - | - | 311,429 |
| 11. குவஸ் கோர்ப் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 61,207 | - | - | 17,364 | 78,571 |
| 12. ப்ரானிஸ் கெபேடேரியா | 12,041 | - | - | - | 12,041 |
| **மொத்தம் - எம்டி (அ)** | **5,312,678** | **40,695** | **-** | **4,228,450** | **9.581,823** |
| **சிபேங்க் ஹவுஸிலுள்ள ஒப்பந்தக்காரர்கள் - கண்டி** | | | | | |
| 1. இலங்கை வங்கி மத்திய மாகாண அலுவலகம் | 270,830 | 270.830 | 379,162 | 2,275,501 | 3,196,323 |
| 2. இலங்கை வங்கி சுபர் க்ரேட் கிளை – கண்டி | 695,553 | 695,553 | 695,553 | 3,250,270 | 5,336,929 |
| **மொத்தம் - சிபேங்க் (ஆ)** | **966,383** | **966,383** | **1,074,715** | **5,525,771** | **8,533,252** |
| **முழுவதுமான மொத்தம் (அ + ஆ)** | **6,279,061** | **1,007,078** | **1,074,715** | **9,754,221** | **18,115,075** |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2021 டிசெம்பர் மாதத்தில் எஞ்சினுய்டி (பிறைவேட்) லிமிட்டடின் ஒப்பந்த உடன்படிக்கை முடிவடைந்துள்ள போதிலும் கணக்காய்வு திகதியான 2023 ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரை ரூபா 3,847,913 நிலுவை மீதியானது மீட்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சினுய்டி (பிறைவேட்) லிமிட்டட்டிடமிருந்து நிலுவையினை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (வழக்கு இல. டிஎம்ஆர் 1375/23) | நட்டமின்றி நிலுவை மீதியினை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. |

## 1.7 காசு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி எப்போதும் உயர் நடைமுறைச் சொத்து நிலையை பேணி வருவதுடன் இலாபம் ஈட்டும் நீண்டகால முதலீடுகள் மீது கவனம் செலுத்துவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. பின்வரும் அட்டவணையின் பிரகாரம் 2018 முதல் 2020 வரை மொத்த சொத்துக்கான நடைமுறைச் சொத்துக்களின் சதவீதம் படிப்படியாக 49 சதவீதத்திலிருந்து 64 சதவீதம் வரை அதிகரித்துள்ளதுடன் 2021 ஆம் ஆண்டில் இது 43 சதவீதத்திற்கு குறைவடைந்துள்ளது. எனினும் 2022 ஆம் ஆண்டின் போது உரிமையில் முதலீட்டின் சடுதியான குறைவு மற்றும் இருப்புக்களின் அதிகரிப்பு காரணமாக மீளாய்வாண்டின் போது நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் மீண்டும் 50 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. | வேறோரு கட்டிட முகாமைத்துவ செயற்திட்டத்தில் முதலீடு செய்வதற்காக சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | திரவத்தன்மை மற்றும் இலாபத்தன்மை என்பவற்றுக்கிடையே சமநிலையொன்றினை பேணுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| விபரம் | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|
| மொத்தச் சொத்துக்கள் (ரூபா 000) | 2,169,300 | 2,112,041 | 2,050,868 | 1,927,314 | 1,814,396 |
| நடைமுறை சொத்துக்கள் (ரூபா 000) | 1,075,678 | 901,564 | 1,310,738 | 1,155,591 | 882,841 |
| காசு மற்றும் காசிற்கு சமனானவை (ரூபா 000) | 1,384 | 2,390 | 6,017 | 681 | 1,635 |
| ஏனைய நடைமுறை நிதிச் சொத்துக்கள்/ குறுகிய கால முதலீடு (ரூபா 000) | 1,043,078 | 883,942 | 1,281,361 | 1,123,089 | 863,099 |
| மொத்த சொத்துக்களின் % ஆக நடைமுறைச் சொத்துக்கள் | 50 | 43 | 64 | 60 | 49 |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 279 மில்லியன் தொகை இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபமாக ரூபா 189 மில்லியன் தொகை காணப்பட்டது. ஆகையால், நிதி விளைவில் ரூபா 90 மில்லியன் தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது 178 சதவீதத்தினால் நிதி வருமானம் அதிகரிப்பு மற்றும் 27 சதவீதத்தினால் நிர்வாக மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் குறைவு என்பன நிதி விளைவு அதிகரித்தமைக்காக பிரதான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவடைதல் சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | வேறுபாட்டுத் தொகை அதிகரிப்பு / வீழ்ச்சி (ரூபா 000’) | வேறுபாடு (%) | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| நிலையான வைப்பின் மீது நிதி வருமான வட்டி | 125,401,441 | 178 | நிலையான வைப்புக்களுக்காக உயர் வட்டி வீதம் வழங்கப்பட்டது. |
| நிர்வாகம் மற்றும் ஏனைய செலவினங்கள் | (4,752,030) | 27 | கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட பணத்தின் காரணமாக ஐயக்கடன் ஏற்பாடு திரும்பல் செய்யப்பட்டமை |
| வரிச் செலவினங்கள் | 59,688,671 | 92 | முதலீட்டு வருமானத்தின் அதிகரிப்பு காரணமாக வரி விதிக்கக்கூடிய வருமானம் அதிகரிக்கப்பட்டது. |

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 வருட காலப்பகுதிகளுக்கான கம்பனியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2022 | 2021 | 2020 | 2019 | 2018 |
|---|---|---|---|---|---|
| தேறிய இலாப விகிதம் (சதவீதம்) | 74 | 64 | 71 | 66 | 67 |
| நடைமுறை சொத்துக்கள் விகிதம் (தடவைகள்) | 10.93 | 18.29 | 23.95 | 34.54 | 32.22 |
| மொத்த சொத்துக்களுக்கான தேறிய நடைமுறைச்சொத்துக்கள் (தடவைகள்) | 0.45 | 0.40 | 0.61 | 0.58 | 0.47 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

**கணக்காய்வு விடயம்**

(i) நான்கு ஒப்பந்த உடன்படிக்கைகள் காலாவதியாகியிருப்பதுடன் கணக்காய்வு திகதியான 2023 ஆகஸ்ட் 21 வரை எவ்விதமான புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கைகளும் காணப்படவில்லை. அக்காலாவதியான ஒப்பந்த உடன்படிக்கைகளின் விபரங்கள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| | **குத்தகைக்கு பெற்றவர்** | **உடன்படிக்கை இல.** | **உடன்படிக்கை காலப்பகுதி** |
|---|---|---|---|
| 01 | இலங்கை வங்கி சுபர் க்ரேட் - கண்டி | 266 | 2021 இல் காலாவதியானது |
| 02 | இலங்கை வங்கி மேல் மாகாணம் - வடக்கு | 353/3050 | 2021.01.01 முதல் 2022.12.31 |
| 03 | இலங்கை வங்கி மத்திய மாகாணம் | 267/117/2073 | 2019.12.01 முதல் 2020.12.31 |
| 04 | மொபிட்டல் | 194 | 2018.02.18 முதல் 2023.02.17 |

**முகாமைத்துவ கருத்துரை**

**1 & 3. பிஓசீ சுபர் க்ரேட் / பிஓசீ மத்திய மாகாண உடன்படிக்கை இலக்கங்கள் 266 & 267/117/2073 –** இவ்விரண்டு உடன்படிக்கைகளும் 2021 ஆம் ஆண்டுக்காக புதுப்பிக்கப்பட்டுள்ளன. புதுப்பிக்கப்பட்ட உடன்படிக்கைகள் பிஓசீ மத்திய மாகாண அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைகள் இதுவரை பெறப்படவில்லை.

**02. பிஓசீ மேல் மாகாண உடன்படிக்கை இல. 353/3050 –** உறுதிப்படுத்துவதற்கான வரைவு அனுப்பப்பட்டுள்ளதுடன் 2023/2024 உறுதிப்படுத்தலானது பிஓசி மேல் மாகாண (வடக்கு) அலுவலகத்திடமிருந்து நிலுவையாக உள்ளது.

**04. மொபிட்டல் உடன்படிக்கை இல.194** – வாடகை பெறுமதிக்கான பேரம்பேசுதலானது செயன்முறையில் உள்ளதுடன் 2023 செப்தெம்பர் மாதத்தினுள் இதனை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**பரிந்துரை**

ஒப்பந்த காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக ஒப்பந்த உடன்படிக்கையினை அல்லது புதுப்பித்தலினை கைச்சாத்திடுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வங்கியின் மதிப்பீட்டாளர் குழுவிடமிருந்து பெறப்பட்ட புதியதொரு மதிப்பீட்டின் மூலம் குத்தகைக்கு வழங்கியவரிற்கும் குத்தகைக்கு பெற்றவிரிற்கும் இடையே மேற்கொள்ளப்படும் பரஸ்பர உடன்படிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு இரண்டு (02) ஆண்டுகளின் இறுதியில் வாடகை மீளாய்வு செய்யப்பட வேண்டும். எனினும் உடன்படிக்கையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டுக்கான பின்வரும் குத்தகைக்கு பெற்றவர்களுக்கான புதிய மதிப்பீட்டு அறிக்கைகள் பெறப்பட்டிருக்கவில்லை.<br>○ குவஸ் கோர்ப் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்<br>○ பிஓசீ மேல் மாகாணம் - வடக்கு<br>○ சீபேங் சொத்து முகாமைத்துவ (பிறைவேட்) லிமிட்டட்<br>○ ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி<br>• உடன்படிக்கை இல – 307<br>• உடன்படிக்கை இல – 310<br>• உடன்படிக்கை இல – 206 | அடுத்து வரும் 2024 சனவரி 01வது வருடம் முதல் வாடகை அல்லது சேவைக்கட்டணத்தினை திருத்துமுகமாக இரு கட்டிடங்களிற்கும் பிஓசீ மதிப்பீட்டாளர் குழுவிடமிருந்து பெறும் வாடகை மதிப்பீட்டைக்கொண்டு செயற்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்து. | வாடகை உடன்படிக்கைகளில் உள்ளக்கப்பட்டுள்ள உட்பிரிவுகளுடன் இணங்குவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iii) | குத்தகைக்கு பெற்ற அனைவருடனான ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலிருந்து 14 நாட்களுக்கு முதல் மாதாந்த வாடகையினை அவர்களினால் செலுத்த முடியாவிட்டால் குத்தகைக்கு பெற்றவரிடமிருந்து மாத வாடகையிலிருந்து 20 சதவீதம் தண்டப்பணம் அறவிடப்படுகிறது. குத்தகைக்கு பெற்றவர்கள் 03 மாத காலத்திற்கும் மேலாக கொடுப்பனவினை தாமதப்படுத்தியிருந்த போதிலும் தாமதித்த கொடுப்பனவுகளிற்காக எவ்வித தண்டப்பணங்களும் அவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. குத்தகைக்கு பெற்றவர்களின் விபரங்கள் கீழே வழங்கப்படுகிறது.<br>○ இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம்<br>○ எஸ்எல்ஐஐடி அகடமி (பிறைவேட்) லிமிட்டட்<br>○ குவஸ் கோர்ப் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | சகல ஒப்பந்த உடன்படிக்கைகளிலும் தண்டப்பண உட்பிரிவு காணப்படுகின்ற போதிலும் ஒப்பந்தத்துக்கு பெற்றவர்களிடமிருந்து ஆரம்பத்திலிருந்தே தண்டப்பணம் அறவிடப்படவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் தாமதித்த ஒப்பந்த கொடுப்பனவுகளின் மீது தண்டப்பணம் விதிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (iv) | ஒப்பந்தக் காலம் ஆரம்பிப்பதற்கு முதல் ஒப்பந்த உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட வேண்டுமாயினும் 2022 ஆம் வருடத்துடன் தொடர்புடைய 19 நிகழ்வுகள் குறிப்பிடப்பட்ட ஒப்பந்த காலம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ஒப்பந்த உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே வழங்கப்படுகின்றது. | பொதுவாக நடைமுறையில் உள்ள உடன்படிக்கைகள் காலாவதியாவதற்கு 3-4 மாதங்களுக்கு முன்பாக உடன்படிக்கையினை புதுப்பிக்கும் செயற்பாட்டினை நாங்கள் ஆரம்பிக்கிறோம். எம்மிடம் குத்தகைக்கு பெற்றவர்களில் பெரும்பாலானோர் பிஓசீ மற்றும் பிஓசீ துணைக்கம்பனிகளாகவும் | ஒப்பந்தக் காலம் ஆரம்பிப்பதற்கு முன்பாக ஒப்பந்த உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

| | ஒப்பந்தத்திற்கு பெற்றவர்களின் பெயர்கள் | உடன்படிக்கை இல. | |
|---|---|---|---|
| 01 | டியலொக் அக்ஸியடா பிஎல்சி | 335 | நீண்டகாலமாக எம்முடன் இணைந்திருக்கிறார்கள். பல்வேறு காரணங்களினால் உடன்படிக்கையினை நிறைவேற்றுதில் தாமதம் ஏற்படுகின்ற போதிலும் நாங்கள் காலாவதியாவதற்கு முன்பாக எழுத்து மூலமாகவோ வாய்மொழி மூலமாகவோ உறுதிப்படுத்தலினை பெறுகிறோம். மேலும் குத்தகைக்கு பெற்ற சகலரும் செயற்பாட்டின் போது தொடர்புடைய வாடகை மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை தொடர்ச்சியாக செலுத்துகின்றனர். |
| 02 | குவஸ் கோர்ப் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 309 | |
| 03 | ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி – 17வது மாடி | 359 | |
| 04 | பிஓசீ மேல் மாகாணம்-வடக்கு | 353/3050 | |
| 05 | இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம் | 344 | |
| 06 | எஸ்எல்ஐஐடி அகடமி (பிறைவேட்) லிமிட்டட் | 383 | |
| 07 | இலங்கை வங்கி சுபர் க்ரேட்- கொள்ளுப்பிட்டி | 348/1450 | |
| 08 | ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி – 09வது மாடி | 307 | |
| 09 | ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி – 8வது மாடி | 310 | |
| 10 | ப்ரானிஸ் கெபேடேரியா | 351 | |
| 11 | இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு | 355 | |
| 12 | மொபிட்டல் | 194 | |
| 13 | பர்தி எயார்டல் லங்கா (பிறைவேட்) லிமிட்டட. | 331 | |
| 14 | ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி | 346 | |
| 15 | ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி- இடைமட்ட மாடி | 347 | |
| 16 | ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி | 345 | |
| 17 | சீபேங் சொத்து முகாமைத்துவ (பிறைவேட்) லிமிட்டட் | 314 | |
| 18 | ஸ்ரீ லங்கா மேர்ச்சன்ட் பேங் & பைனான்ஸ் பிஎல்சி | 204 | |
| 19 | சீபேங் சொத்து முகாமைத்துவ (பிறைவேட்) லிமிட்டட்- 11, 14, 18, 10 & தரை மாடி | 385 | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 தந்திரோபாயத் திட்டம் மற்றும் செயல்நடவடிக்கை திட்டம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஒவ்வொரு கம்பனியினாலும் சாதாரனமாக ஐந்து வருட காலப்பகுதிக்கான தந்திரோபாய திட்டமிடல் செயற்பாடு மேற்கொள்ளப்படும். கம்பனி அதன் குறிக்கோள்களினை அடைந்து கொள்வதற்கும், அதன் வளங்களின் உச்ச பயன்பாட்டினை நிச்சயித்துக்கொள்வதற்கும் இது உதவி செய்யும். எனினும் கம்பனியினால் 2022 முதல் 2026 வரையிலான ஐந்து வருட காலப்பகுதிக்கான தந்திரோபாய திட்டம் தயாரிக்கப்படவில்லை. | கம்பனி தொடங்கியதிலிருந்து தந்திரோபாய திட்டமொன்றினை கொண்டிருக்கவில்லை. 2023 – 2025 காலப்பகுதிக்கான புதிய தந்திரோபாய திட்டம் தயாரிக்கப்படவில்லை. | கம்பனியின் குறிக்கோள்களினை அடைந்து கொள்வதற்காகவும் வளங்களின் உயர் பயன்பாட்டினை நிச்சயித்துக்கொள்வதற்காகவும் தந்திரேபாய திட்டமொன்றினை தயாரிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| (ii) | தந்திரோபாய திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள குறிக்கோள்களினை அடைந்துகொள்ளும் நோக்கில் பூர்த்தி செய்யப்படவேண்டிய தந்திரோபயாயங்கள், குறிப்பிடத்தக்க செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் என்பவற்றை அமைத்துக்கொள்வதன் மூலம் கம்பனியினால் குறிப்பிட்ட ஆண்டுக்கான செயல்திட்ட நடவடிக்கை தயாரிக்கப்பட வேண்டும். அதே போன்று அவ்வாறான நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கான பொறுப்புக்களானவை பூர்த்தி செய்ய வேண்டிய காலம் மற்றும் எதிர்பாரக்கப்படும் நிதி மதிப்பீடு என்பவற்றினை உள்ளடக்கி பொருத்தமான அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். எனினும், கம்பனியினால் 2022 ஆம் நிதி ஆண்டுக்கான செயல்திட்ட நடவடிக்கை தயாரிக்கப்படவில்லை. | 2023 – 2025 காலப்பகுதிக்கான தந்திரோபாய திட்டத்தில் செயல்திட்ட நடவடிக்கை உள்ளடக்கப்பட்டுள்ளது. | தந்திரோபாய திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள குறிக்கோள்களினை அடைந்துகொள்வதற்காக குறித்த ஆண்டுக்கான செயல்நடவடிக்கையினை தயாரிப்பதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |

**4.2 உள்ளக கணக்காய்வு**

2022 ஆம் ஆண்டின் போது கம்பனியின் உள்ளக கணக்காய்வாளர்களினால் வழங்கப்பட்ட உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| பரப்பு | அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்பம் | கடவுச்சொல் கொள்கை காணப்படாமையும் தொடர்ச்சியான அடிப்படையில் கடவுச்சொல் புதுப்பிக்கப்படாமையும்<br><br>சேவையகதினைத் தவிர பயனர் கணினி கடவுச்சொற்கள் தன்னிச்சையாக புதுப்பிக்கப்படுவதில்லை.<br><br>ஊழியர்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயனர் கணினிகளில் ஜீ-மைலினை மதிப்பீடு செய்துகொள்வதற்கு மின்னஞ்சல் கொள்கை காணப்படவில்லை.<br><br>கணினிகளின் வெளிப்புற சாதனங்கள் மீது அணுகல் கட்டுப்பாடு காணப்படவில்லை<br><br>அங்கீகரிக்கப்படாத மென்பொருள் நிகழ்ச்சித்திட்டத்தை நிறுவுவதை தடுப்பதற்கான கட்டுப்பாடுகளினை பயனர் கணினிகள் தடைசெய்வதில் தோல்வி<br><br>“Busy” முறைமை மற்றும் டிஎம்எஸ் (DMS) முறைமை என்பவற்றுக்கான நாளதுவரையான பதிப்புக்கள் காணப்படவில்லை.<br><br>சேவையகம் உள்ள அதே இடத்தில் வன்வட்டு மீட்டெடுத்தல் பொருத்தப்பட்டுள்ளது.<br><br>02 பயனர் கணினிகளுக்கான தீச்சுவர் (Firewall) மற்றும் வைரஸ் காவலர் (Virus Guard) என்பன காணப்படவில்லை. | எம்பிஎஸ்எல் ஐடி (MBSL IT) திணைக்களத்துடன் இணைந்து பொருத்தமான தகவல் தொழில்நுட்ப கொள்கையினை தயாரிப்பதற்கு சபை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | தகவல் தொழில்நுட்ப கொள்கை மற்றும் நடைமுறையினை அபிவிருத்தி செய்து, அமுல்படுத்துமாறு பரிந்துரைக்கப்படுகிறது. அதே போன்று தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளினை சரியான முறையில் கையாள்வதற்கு தகவல் தொழில்நுட்ப வல்லுனர் ஒருவரை ஒதுக்கீடு செய்வதற்கும் பரிந்துரைக்கப்படுகிறது. |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியக் காப்பாளர் தரவு மீட்டெடுத்தல் செயற்பாட்டினை கைமுறையாக பராமரிக்கின்றார். | | |
| செயல்திறன் தரங்கணிப்பீடு | முகாமையாளர்களின் தரங்கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் 2021 மற்றும் 2022 ஆகிய இரண்டிற்கும் வெற்று தரங்கணிப்பீட்டுப் படிவங்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. | 2022.08.25 இல் தலைமை நிறைவேற்று அதிகாரியின் நியமனத்துடன், 2023 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | செயல்திறன் தரங்கணிப்பீட்டினை சரியான முறையில் மதிப்பீடு செய்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |
| நடைமுறை கேயேட்டின் 15.1.2 ஆம் பிரிவின் பிரகாரம் வேலை விபரம் மற்றும் வேலை விபரக்குறிப்பு | வேலை விபரக்குறிப்பு காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தயாரிப்பு செயற்பாடு செயன்முறையில் உள்ளது. | நடைமுறை கேயேட்டின் பிரகாரம் தயாரிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. |
| வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ள இடம் | 10வது மாடிப் பரப்பின் ஒரு பகுதி பார்னீஸ் உணவகத்திற்கு தரைப் பரப்பு அடிப்படையின்றி மாதாந்தம் ரூபா 12,500 இற்கு வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இது கொழும்பு 03 இல் நிலுவுகின்ற சராசரி வீதத்தினை விட குறைவானதாகும். | கொவிட் 19 பாதிக்கப்பட்ட காலப்பகுதியின் போது குறிப்பிடப்பட்டுள்ள வீதம் வழங்கப்பட்டது. 2023 யூலை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் வீதமானது ரூபா 17,500 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. | சந்தையில் நிலவும் வீதத்தினை கருத்திற்கொள்வதற்கு பரிந்துரைக்கப்படுகிறது. |